[14th December 1961

Bus Service (Madras-Gudiyatham)

* 2331 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of SRI M. P. SARATHI) : கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை-குடியாத்தம் மார்க்கத்தில் எத்தனை பஸ்கள் ஓடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளன ?

(இ) அதிக பஸ்களை இந்த மார்க்கத்தில் விடவேண்டுமென்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வந்தனவா ?

(உ) அவைகளின்மீது அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (அ) Two, Sir.

(இ) & (உ) Sir. There was however a request from the M.L.A., for provision of additional facilities on the route. This was not pursued by the Regional Transport Authority, North Arcot in view of the increased facilities provided on the major portion of the route by the introduction of additional buses on five other routes overlapping the route in question.

SRI V. K. KOTHANDARAMAN : மூன்று நான்கு வருடகாலமாகவே குடியாத்தத்திலிருந்து சென்னைக்கு வரக்கூடிய பஸ்ஸை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்று பொதுஜனங்களிடமிருந்து கோரிக்கை வந்ததா இல்லையா என்பதில்லை. நானே எழுதியனுப்பியிருக்கிறேன். அதன் பேரில் நடவடிக்கைகள் எடுப்பதாக கனம் அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். ஆகவே அதை அதிகப்படுத்துவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : அதிகப்படுத்துவதில் சிரமம் ஒன்றும் எனக்கு நேரடியாகயில்லை. இருந்தாலும் பஸ்ஸினுடைய தேவை எவ்வளவு என்பதை நிர்ணயம் செய்வதற்கு, அதைப் பார்ப்பதற்கு ரீஜினல் டிரான்ஸ்போர்ட் அத்தாரிட்டி அவர்களது முயற்சி போதாது என்பதற்காக சமீபத்தில் ப்ளானிங் அன்ட் டெவலப்மென்ட் லிங்க் என்ற அமைப்பை ஏற்படுத்தி அவர்கள் எல்லாம் பரிசீலனை செய்துதான் எந்த ஒரு முடிவும் எடுக்க வேண்டும். அந்த முறையில் பார்த்தால், நான் பதிலில் குறிப்பிட்டிருப்பதுபோல், அந்த வட்டாரத்தில் போதுமான அளவிற்கு பஸ் போக்குவரத்து சமீப காலத்தில் ஏற்பட்டிருப்பதை திரும்பவும் சொல்ல விரும்புகிறேன்.

Salem-Cuddalore Road

DEPUTY SPEAKER : As the hon. Member who gave notice of question No. 2332 is not in his seat, the question and answer will be printed in the Proceedings.

* 2332 *Q.*—SRI M. SELVARAJ : கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தாலூகாவில், சேலம்-கடலூர் பாதையிலிருந்து முதனை, பெரியகாப்பான்குளம், இறப்பு வழியாக காட்டுகூடலூர் சாலை போடுவதற்கு இதுவரையில் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது ?